அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 04/2017

எனது இல.: R/3/3/2013 (தொகுதி II)
இணைந்த சேவைகள் பிரிவு
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

2017 செப்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி

சகல அமைச்சு செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்ட செயலாளர்களுக்கும், பிரதேச செயலாளர்களுக்கும்,

**அரசாங்க அலுவலர்கள் தொடர்பாக புதிய ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் பொருட்டு நியமனக் கடிதத்தை மீளமைத்தல்**

2017.08.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 21/2017 சம்பந்தமானது.

02. அதற்கமைய 2016.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் நியமனத் திகதியைக் கொண்ட இணைந்த சேவைகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் 07 ஆம் பிரிவு மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பின்வருமாறு திருத்தியமைப்படுகின்றது.

> **“இப் பதவி ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.”**

03. மேலும், மேற்படி திருத்தங்கள் தொடர்பாக குறித்தொதுக்கப்பட்ட சேவைகள் மற்றும் நியமனத் திகதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அத் திருத்தங்கள் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக ஏற்புடையதாகாது. இது தொடர்பாக குறித்த அலுவலர்களை அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

| **சேவை** | **நியமனத் திகதி** |
|---|---|
| அரசாங்க மொழிபெயர்ப்புச் சேவை | 2016.11.24 |
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பால் தொழிநுட்ப சேவை - 2 (II) | 2016.05.02<br>2016.09.05<br>2017.04.17 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 2016.01.01 திகதிக்குப் பின்னரான நியமனத் திகதி |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 2016.03.09<br>2016.07.04<br>2016.08.15<br>2017.01.16 |
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பால் தொழிநுட்ப சேவை – 3 (III) | 2016.10.17<br>2017.03.20<br>2017.05.02 |
| அலுவலக உதவியாளர் சேவை | 2016.01.01 திகதிக்குப் பின்னரான நியமனத் திகதி |
| சாரதி சேவை | |

கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு